# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

## தரம் 6



அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

# பரத நாட்டியம்

## வாசிப்புத் துணை நூல்

# தரம் 6

**(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk
info@nie.lk

**வாசிப்புத் துணை நூல்**
**பரத நாட்டியம்**
**தரம் 6**

தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
முதற் பதிப்பு : 2015

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
இலங்கை.

# அறிமுகம்

இலங்கைப் பாடசாலை முறைமையில், மையப் பாடங்களாக அதாவது பிரதான பாடங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள, தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக நீண்டகாலமாகப் பாடத்திட்டத்துக்கு இணையாக ஆசிரியர் வழிகாட்டியும் (Teachers' Guide), பாடநூலும் (Text Books) பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதற்கமைய ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்களுக்கும், பாடநூலை மாணவர்களுக்கும் வழங்கி மாணவர்களது அறிவுக் கண்களைத் திறக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அழகியற் பாடமானது அறிவை மாத்திரமன்றி நற்பண்புகளையும், நன்மனப்பாங்குகளையும் உடைய திறன்களை வளர்ப்பதில் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது. மனிதன் நற்பண்புடையவனாகும்போது அவனது நடத்தை மனித வர்க்கத்தின் இருப்புக்கும், சூழலினதும் இயற்கையினதும் இருப்புக்கும் சாதகமாக அமையும். அறிவும் நற்பண்புகளும் கொண்ட மாணவனையே இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது. அவ்வாறான ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அழகியற் பாடத்தையும் ஒரு பிரதான பாடமாகக் கருதிச் செயற்படுவது பொருத்தமானது. அதனை உணர்ந்து இப்பாடத்தின் மேம்பாட்டுக்காக நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் நாம், மையப் பாடங்களை மட்டுமல்லாது இப்பாடத்துக்கும் பாடநூல்கள் தயாரிக்கப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறோம். இது ஒரு பிரதான பாடம் அல்லாதபோதும், ஆசிரியரது கற்பித்தற் பணிக்குத் துணையாவதற்கான ஒரு கைந்நூலாக இவ்வாறான ஒரு மேலதிக வாசிப்பு நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந் நூல் மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூலுக்கு ஒப்பான ஒன்றல்ல. எனினும், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் வலுவூட்டத்தக்க, தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஒரு வளமாகும். மேலும் நாடெங்கிலும் இப்பாடவிடயங்கள் தொடர்பான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இது துணையாகும்.

வகுப்பறைக்கு வலுவட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இக் கற்றல் - கற்பித்தல் வள நூலைக் கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்வதன் மூலம் அடைய எதிர்பார்க்கும் சிறப்பான பேறுகள் வருமாறு:

1. ஆசிரியர்களுக்குத் தேவையான பாடவிடயங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி வழங்குவதன் மூலம் ஆசிரியது வினைத்திறனை மேம்படுத்தல்.
2. ஆசிரியர் வழிகாட்டியில் விரிவாக இடம் பெற்றுள்ள பாடவிடயங்களை மேலும் விரிவாக முன்வைத்தல்.
3. ஆசிரியர் வழிகாட்டிக்குக் குறை நிரப்புதலாக அமைதல்.
4. கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகத்தக்க பாடவிடயங்கள் தொடர்பாகத் தேசிய ரீதியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான திட்டவட்டமான விடயங்களை/ தர்க்கங்களை முன்வைத்தல்.
5. பாடவிடயங்களின் சமநிலை மற்றும் திட்டவட்டமான வரையறைகளை முன்வைத்தல் மூலம் மதிப்பீட்டுப் பணிகளை இலகுபடுத்தல்.
6. ஆசிரியரது அறிவை, பாடத்திட்டத்துக்கு அப்பாலும் விரிவுபுடுத்தி, பாடவிடய அறிவு தொடர்பான தன்னம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
7. ஆசிரியர்கள் மாணவர்கள் இரண்டு தரப்பினருக்கும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை அர்த்தமுள்ள இனிய அனுபவமாக்குதல்.

உரிய ஒரு கற்றல் வளமாகிய இது, எமது நாட்டு மாணவ சந்ததியின் அறிவையும் நற்பண்புகளையும் வளர்ப்பதற்கான இனிய கற்றற் சூழலை உருவாக்குவதற்கும் ஆசிரியர்க்குத் துணையாக அமையும். ஆசிரியர்களாகிய உங்களது செயலூக்கமும் அறிவாற்றலும் மென்மேலும் விருத்தியடையட்டும். மேலும் சமகால மாணவ மாணவியர்க்கு அழகியற் பாடக் கற்றல் கற்பித்தலானது ஓர் இனிய அனுபவமாக அமையட்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**சாஸ்திரபதி சுதத் சமரசிங்ஹ,**
பணிப்பாளர் (அழகியற் கல்வித் துறை),
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
இலங்கை.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றலானது தொடர்ச்சியான கணிப்பீட்டுக்கு உட்பட்டு வருகின்றது. உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெறுவதற்குப், பரந்தளவு அனுபவங்கள் கிடைத்தல் வேண்டும். அவ்வாறு பரந்தளவு அனுபவங்களுடன் உயர்ந்த கணிப்பீட்டைப் பெறுவோர் அதிகளவு மகிழ்ச்சியடைவர். இதன் பொருட்டு உரிய நபர்கள், இடங்கள், பொருள்கள் மற்றும் சூழ்நிலைகள் கிடைத்தல் அவசியமாகும்.

பரதநாட்டியத்தைப் பயிலும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை விரிவடையச் செய்வதற்காக, மேலதிக வாசிப்பு நூலைத் தயாரிக்க முடிந்தமையையிட்டுத் தேசிய கல்வி நிறுவகம் மகிழ்ச்சியடைகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

மாணவர் சமூகம் மேற்படி மேலதிக வாசிப்பு நூலைப் பயன்படுத்தி, அந்நூலில் காணப்படும் ஏனைய அறிவு மூலங்களையும் தமதாக்கிக் கொண்டு உயர்ந்த அடைவுமட்டத்தை நோக்கிச் செல்ல முடியும். இதற்கிணங்க மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்கள் உட்பட அனைவரும் இது குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். மேற்படி மேலதிக வாசிப்பு நூலை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளை அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். பிள்ளைகளின் கற்றல் அனுபவங்களை விரிவுபடுத்துவதற்குத் தேவையான சிறந்த சூழல் ஏற்பட வேண்டும் எனப் பிராத்திக்கின்றேன்.

**கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்,**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## முன்னுரை

புதிய சவால்களை எதிர்நோக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த வாசிப்பு நூல் மாணவர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

‘‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’’ என்பது கலைகளுக்கும் பொருந்தி வருவதே. அந்த வகையில் புதிய சிந்தனைகளுடன் தயாரிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டமானது பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக நாட்டில் இனச் சமத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய சிந்தனையுடன் புதிய நாளொன்றுக்காகக் காத்திருக்கும் மாணவர்களிடையே சிந்தனைத் தடங்கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டு இந்நூல் அறிமுகப்படுத்தப்படுகிறது. சிறியளவு வளங்களில் பெருமளவு பயன்பெறவேண்டியது இன்றைய சமுதாயத்தின் நிலையாய் இருப்பினும் இந்நூல் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் பெருந்துணை புரியும் ஒரு சாதனமாகும்.

திருமதி.நிஷாந்தராகினி திருக்குமரன்,
செயற்றிட்டத் தலைவர்,
அழகியற்கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : | கல்விசார் அலுவல்கள் சபை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பாட நிபுணத்துவ ஆலோசனை | : | திரு. சுதத் சமரசிங்ஹ,<br>பணிப்பாளர் - அழகியற்கல்வித் துறை. |
| பாட இணைப்பாக்கம் | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| எழுத்தாளர் குழு<br>(உள்வாரி) | : | திருமதி. நிஷாந்தராகினி திருக்குமரன்,<br>செயற்றிட்டத் தலைவர்,<br>அழகியற்கல்வித் துறை. |
| (வெளிவாரி) | : | திருமதி.கே.எ.ஹரிஸ்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>கல்வி வலயம்,<br>கம்பளை.<br><br>திருமதி தேவகுமாரி யோகேந்திரன்,<br>ஆசிரியர்,<br>யா /தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம். |
| மொழி மேற்பார்வை | : | திரு.எஸ்.செல்வகுமார்,<br>ஆசிரியர்,<br>யா /பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை. |
| கணினி கோர்ப்பும் வடிவமைப்பும் | : | திருமதி.கே.எ.ஹரிஸ்,<br>ஆசிரிய ஆலோசகர்,<br>கல்வி வலயம்,<br>கம்பளை.<br><br>செல்வி. செல்வரஞ்சினி செல்லத்துரை,<br>ஆசிரிய நூலகர்,<br>யா /தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம். |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | திரு. ரவீந்ர தேநுவர. |

# உள்ளுறையாக


| | |
|---|---|
| அறிமுகம் | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| முன்னுரை | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| உள்ளுறையாக | vii |
| | |
| சின்னச் சின்ன சிறுமியர் | 1 |
| நமஸ்கார விளக்கம் | 2 |
| தியான ஸ்லோகம் | 3 |
| ஒற்றைக்கை முத்திரை | 4 |
| பரதநாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் | 5 |
| குருவணக்கம் | 6 |
| உலகியல் வரலாறு | 7 |
| ஆசானாக நானிருந்தால் | 8 |
| தண்டியம் | 9 |
| தட்டடவு | 10 |
| தட்டடவு தாளம் (1 - 8 ) | 11 - 17 |
| நாட்டடவு | 18 |
| நாட்டடவு தாளம் | 19 |
| நாட்டியக் கிரமம் | 20 |
| கோயில் நடனமாதர் | 21 |
| கிராமிய நடனத்தின் வகைகள் | 22 |
| இரட்டைக் கை முத்திரை | 23 |
| அபூர்வ முத்திரை | 24 |
| பரதம் | 25 |
| நாட்டிய லட்ஷணம் | 26 |
| கும்மி | 27 |
| கோலாட்டம் | 28 |
| பன்னிரு மாத இந்து சமய விழாக்கள் | 29 |
| எசல பெரஹரா | 30 |

**தேர்ச்சி 2.0** : இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : அபிநயப் பாடலுக்கு அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்துவார்.

**செயற்பாடு 2.2.1** : ''சின்னச் சின்ன சிறுமியர் நாமே'' என்ற பாடலைப் பாடி அபிநயம் அமைத்து ஆற்றுகைப்படுத்திக் காட்டுவோம்.

## "சின்னச் சின்ன சிறுமியர்"

இராகம் :- ஆனந்தபைரவி

தாளம்:-சதுஸ்ரஏகம்

1) பாபா பாதப மபபம கரிஸநி

சின்னச் சின்னசிறுமியர் நாமே

, ஸாஸ ரீகரி ரிஸஸா ஸா , ,

சேர்ந்து ஆட வந்தோமே..

காகா காகா காமம காமா

வண்ண வண்ண தீபங்கள் ஏற்றி

, ரிரிம பாதப ரீகரி ஸா , ,

வளைந்து ஆட வந்தோமே.

2) பாபப பா,ம பபஸ்நி ஸா ஸா //

மின்னலிடை அசைந்திட நாமே

, நிநிஸ ரீகரி ஸ்நிநீ ஸா, , //

துள்ளி ஆட வந்தோமே

பாஸா நிதநீ பாதப மகமா //

அன்ன நடையும் பொன்னின் அணியும்

,ரிரிம பாதப ரீகரி ஸா , , //

பொலிய ஆட. வந்தோமே

3) காலிற் சிலம்புகள் கலீர் கலீரென

கையிற் தாளங்கள் தத்திமி திமியென

வேலின் விழிகள் மொழிகள் பகர

கூடி ஆட வந்தோமே

4) பெண்கள் குலமே ஓங்கிடவே

பெருமையுடன் அவர் வாழ்ந்திடவே

கண்கள் நாமே நாட்டினிற்கே என்ற

கற்றோர் வாக்கைக் காக்கவேண்டுமே.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்ப தசைநார்ப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்கள், நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பரத நாட்டியத்திற்குரிய அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.1.2 :** நமஸ்காரத்தினைப் பக்தியுடனும். அங்கசுத்தத்துடனும் செய்வதற்குக் கற்றுக் கொள்வோம்.

## நமஸ்கார விளக்கம்

நமஸ்காரம் என்பதன் தமிழ்ச்சொல் வணக்கம் என்பதாகும். இது நடனம் ஆடுவதற்கு முன்னரும் நடனம் ஆடிய பின்னரும் செய்தல் வேண்டும். நமஸ்காரத்தின் போது கடகாமுகம், சிகரம், சதுரம், அஞ்சலி ஆகிய ஹஸ்தங்களும் சமபாதம், முழுமண்டி ஆகிய பாதநிலைகளும் இடம்பெறுகின்றன.

நாம் நடனம் ஆடும் போது, ஒருவர் முரசு அடிப்பவர் போல் இருக்கின்றார். அதே வேளையில் அவரது பாதங்கள் கழிகளாகவும், பூமி முரசாகவும் மாறுகின்றன ''பூமாதேவியே உன்னை என் பாதங்களால் ஓங்கி மிதிப்பதை நீ பொறுத்தருள வேண்டும்'' என்று இறைவனைப் பிரார்த்திப்பதாக அமைகின்றது. இது முறையே குருவுக்கும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும், பூமாதேவிக்கும், சபையோருக்கும் வணக்கம் செலுத்துவதாக அமைகிறது.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும் அடவுகளையும், அங்க பேதங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1:** பரத நாட்டியத்திற்குரிய அடிப்படைப் பயிற்சிகளை மேற்கொள்வார்.

**செயற்பாடு 3.1.3 :** "தியான ஸ்லோகத்தினை அபிநயிக்கக் கற்றுக் கொள்வோம்".

## த்யான ஸ்லோகம்

ஆங்கிகம் புவனம் யஸ்ய வாச்சிகம்

ஸர்வ வாங்மயம்/

ஆஹார்யம் சந்திர தாராதி தம் நுமஹ்

ஸாத்விகம் சிவம்//

**கருத்து:-**

உலகத்தை உடம்பாகவும், பேசும் மொழிகள் யாவும் ஒரே மொழியாகவும், சந்திர, நட்சத்திரங்களை, ஆடை, ஆபரணங்களாகவும் அணிந்த பரிசுத்தமான சிவபெருமானே உம்மை வணங்குகின்றேன்.

| சமஸ்கிருதம் | தமிழ் | பயன்படுத்தும் முத்திரை |
|---|---|---|
| ஆங்கிகம் | உடம்பு | ப்ராளம்பம் |
| புவனம் | உலகம் | ஸுசி |
| யஸ்ய | யாருடைய | ப்ராளம்பம் |
| வாச்சிகம் | வார்த்தைகள் | முகுளத்திலிருந்து அலபத்மம் |
| ஸர்வ | எல்லா | ஸுசி |
| வாங்மயம் | மொழி | த்ரிலிங்கத்திலிருந்து சந்திரகலா |
| ஆஹார்யம் | ஆபரணம் | சதுரம் |
| சந்திர | சந்திரன் | அலபத்மம் (இடது கையில்) |
| தாராதி | நட்சத்திரம் | காங்கூலபேதம் / சிலிட்ட காங்கூலம் (வலது கையில்) |
| தம் | உம்மை | ஸுசி |
| நுமஹ் | வணங்குதல் | அஞ்சலி |
| சாத்விகம் | பரிசுத்தமான | ஹம்ஸாஸ்யம் |
| சிவம் | சிவபெருமான் | சிவலிங்கம் |

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள் முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.1 :** ''ஒற்றைக் கை முத்திரைகளை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுவோம்''.

ஒரு கையால் அபிநயித்தல் ஒற்றைக்கை முத்திரை எனப்படும்.

## ஒற்றைக்கை முத்திரை அல்லது அஸம்யுத ஹஸ்தம்

1. பதாகம் - கொடி
2. திரிபதாகம் - முப்பாகக் கொடி
3. அர்த்தபதாகம் - அரைக்கொடி
4. கர்த்தரீமுகம் - கத்தரிக்கோல்
5. மயூரம் - மயில்
6. அர்த்தச்சந்திரன் - அரைமதி
7. அராளம் - வளைந்தது
8. சுகதுண்டம் - கிளிமூக்கு
9. முஷ்டி - முட்டிக்கை
10. சிகரம் - உச்சி
11. கபித்தம் - விளாம்பழம்
12. கடகாமுகம் - வளையின் வாய்
13. சூசி - ஊசி
14. சந்திரகலா - பிறைச்சந்திரன்
15. பத்மகோசம் - தாமரை மொட்டு
16. ஸர்ப்பசீர்ஸம் - பாம்புப் படம்
17. மிருகசீர்ஸம் - மான்தலை
18. சிம்பமுகம் - சிங்கத்தின் முகம்
19. காங்கூலம் - பழம்
20. அலபத்பம் - மலர்ந்த தாமரை
21. சதுரம் - சாதுர்யம்
22. பிரம்மரம் - வண்டு
23. கம்சாஸ்யம் - அன்னத்தின் அலகு
24. கம்சபக்சம் - அன்னத்தின் சிறகு
25. சந்தம் சம் - இடுக்கி
26. முகுளம் - மொட்டு
27. தாம்ரகூடம் - சேவல்
28. திரிசூலம் - திரிசூலம்

உசாத்துணை : அபிநயதர்ப்பணம், உ.வே.சாமிநாதஜயர்
லகு பரதம், பேராசிரியர் சுதாராணி ரகுபதி.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.1** : பரத நாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்வோம்.

## பரதநாட்டியம் கற்பதனால் ஏற்படும் நன்மைகள்

* பக்தி உணர்வு ஏற்படும்.
* உடலும் உள்ளமும் உறுதியடைகின்றது.
* பல விதமான நோய்களிலிருந்து உடலானது காப்பாற்றப்படுகின்றது.
* குழுவாக நடனமாடும் போது குழு ஒற்றுமை ஏற்படும்.
* போட்டிகளில் பங்குபற்றும் போது விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு உருவாகின்றது.
* படைப்புக்களின் ஊடாகக் கற்பனையாற்றலை வெளிக்கொண்டு வருவதற்கு உந்து சக்தியாக அமைகின்றது.
* இரசிக்கும் தன்மை ஏற்படுகின்றது.
* உடல் கட்டமைப்பும் அழகுணர்ச்சியும் மேம்படும்.
* சமூக அங்கீகாரம், புகழ் என்பன கிடைக்கும்.

**தேர்ச்சி 4.0:** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.2 :** ''குரு வணக்கம்'' என்ற ஸ்லோகத்தினையும் கருத்தினையும் கற்போம்.

## குரு வணக்கம்

''குருர் ப்ரம்மா குரு விஷ்ணு

குரு தேவோ மஹேஸ்வரஹ

குரு சாட்ஷாத் பரப்ரம்ம

தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ''

**கருத்து**:-

குருவே பிரம்மன், குருவே விஷ்ணு, குருவே மஹேஸ்வரன், குருவே பரம்பொருள். அந்தக் குருவிற்கு வணக்கம்.

குருவிற்கு வணக்கம் செய்து, வித்தைகளை ஆரம்பிப்பது பண்டை காலம் தொட்டு நடைபெறும் வழக்கமாகும். மாதா, பிதாவிற்கு அடுத்தபடியாகத் தெய்வத்திற்கு முன்பதாக குரு, வணக்கத்திற்கு உரியவராகிறார்.

''மாதா பிதா குரு தெய்வம்''

**தேர்ச்சி 5.0 :** நடனங்களின் கலாசார, பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5..3:** நடனத்தின் உலகியல் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து அறிவார்.

**செயற்பாடு 5.3.1 :** உலகியல் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி நடனத்தின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வோம்.

## உலகியல் வரலாறு

நாகரிகமோ, பண்பாடோ இல்லாத காலத்தில் மனிதன், தன் மனதில் எழும் உணர்ச்சிகளை ஓசையாக, ஒலியாக மகிழ்வை அன்றேல் துன்பத்தை வெளிப்படுத்தக் கைகளைத் தட்டி, ஒலி எழுப்பி, கூச்சலிட்டு வெளிப்படுத்தினான்.

மொழி தோன்றுவதற்கு முன்பே ஆதிகாலத்தில் மனிதன் சைகைகள் மூலமும், முகபாவங்கள் மூலமும் தனது உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டான். சந்தோஷ மிகுதியால் கைகளைக் கொட்டிச் சத்தமிட்டுத் துள்ளினான். துக்கம் வந்திட்டபோது அழுது கூச்சலிட்டான்.

மனிதர்கள் வெவ்வேறு ஒலி நிலையில் ஓசை எழுப்ப, அது சிறிது சிறிதாக இசை தோன்றக் காரணமானது. குதித்தல், கைதட்டுதல், கை, கால்களின் வெவ்வேறு அசைவுகள் ஒன்று சேர்ந்து நடனமாக வடிவம் பெற்றன.

கைகளின் தட்டுதல் தாளம் ஆகவும், குதித்தல், கை அசைவுகள் நடனமாகவும் வடிவம் பெற்றது. இவ்விதம் இசை, கூத்து, தாளம் என்பவற்றை மனிதன் தான் அறியாமலேயே கண்டு பிடித்தான். இயற்கையை வழிபடவும், பாவனை செய்யவும் முற்பட்டபோது நடனம் தோன்றியது. நாளடைவில் இவை வெவ்வேறு நாடுகள், மொழிகள் கலாசாரங்களுக்கேற்பத் தனித்தன்மை பெற்றது.

**தேர்ச்சி 2.0 :** இயற்கைச் சூழலில் தாம் பார்த்து இரசித்தவற்றையும், வெவ்வேறு வகையான பாடல்களையும் கோர்வைகளையும் அபிநயித்து ஆற்றுகைப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** அபிநயப் பாடல்களுக்கு அபிநயம் அமைத்துக் காட்டுவார்.

**செயற்பாடு 2.2.2 :** ''ஆசானாக நானானால்'' என்ற பாடலைப் பாடி அபிநயித்துக் காட்டுவோம்.

ஆசானாக நானானால் அறிவுரைகள் கூறிடுவேன்

சின்னஞ் சிறிய பாலருக்கு நல்ல கல்வி நான் தருவேன்

டாக்டராக நானானால் நாடி பிடித்துப் பார்த்திடுவேன்

ஊக்கத்துடன் நோயாளிக்கு ஊசிமருந்து ஏற்றிடுவேன்

தந்தை போல நானானால் தபாற்காரன் ஆகிடுவேன்

சைக்கிள் தன்னில் ஏறிடுவேன் தபால் தந்தி கொடுத்திடுவேன்

வியாபாரி நானானால் விற்றிடுவேன் பல பொருட்கள்

காய்கறி விற்றிடுவேன் கண்ணியமாய் வாழ்ந்திடுவேன்.

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** பரத நாட்டிய அடிப்படை அம்சங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.

**செயற்பாடு 4.1.5 :** "தண்டியம்" என்னும் விடயத்தை அறிந்து கொள்வோம்.

## தண்டியம்

தண்டியம் என்பது கோலைக் குறிக்கின்றது. இது நடனப் பயிற்சி செய்யும் தடியாகும்.

ஐந்தாவது வயதில் தண்டியம் பிடித்த நடன மாணவர், ஏழு ஆண்டுகள் பயிற்சிபெற்று பன்னிரண்டாவது வயதில் அரங்கேறுவர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தேவரடியார்கள் எனப்படும் அக்கால நடனமாதர், விஜயதசமியன்று சிலம்பக் கூடத்தில் சதுரமாக நெல்பரப்பி நாட்டியம் கற்றுக் கொள்பவரை நாட்டிய ஆரம்ப முறைக்கேற்ப அரைமண்டியில் நிற்க வைத்துப் பட்டுத்துணியால் சுற்றியிருக்கும் கோலைப் (தண்டியம்) பூசை செய்து கையிற் கொடுப்பர். அக்கோலை, நாட்டியம் கற்றுத்தேர்ந்த சற்று வயதுமுதிர்ந்த தேவரடியார்கள் இருபுறமும் பிடித்துக் கொண்டு மாணவியின் கையைக் கோலின் நடுவே பிடிக்க வைத்து, குரு முதல் அடவை மாணவியின் காலைத் தெய்யா தெய் என்று அழுத்தமாக நெல்லின் மேல் அடித்துக் கற்றுக் கொடுப்பார் என்று தேவரடியார்களின் நாட்டியத் தொடக்கப் பயிற்சி முறையிற் சொல்லப்படுகிறது.

சிங்கள நடனப் பாரம்பரியத்தில் "தண்டியம்" என்பது நடனக் கலைஞர் மண்டிய (அரை மண்டி) என்னும் நிலைக்குச் சென்று "பாசறம்ப" என்னும் அடவுப் பயிற்சியை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் தடியைக் குறிக்கின்றது.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.1** : தட்டடவு பற்றி அறிந்து கொள்வோம்.

## தட்டடவுகள்

- பரதநாட்டியத்தின் ஆரம்ப அப்பியாசமாகும்.
- இடுப்பிலே கைகளை வைத்து நிலத்திலே கால்களைத் தட்டிச் செய்வதனால் இதற்குத் தட்டடவு என்று பெயர்.
- இது எட்டு வகைப்படும்.
- 1,2,4,5,6,7 வரையிலான அடவுகள் ஆதிதாளத்திலும், 3ஆவது 8 ஆவது அடவுகள் ரூபக தாளத்திலும் அமைந்திருக்கும்.

| அடவு | சொற்கட்டு |
|---|---|
| 1 | தெய்யாதெய் |
| 2 | தெய்யாதெய் |
| 3 | தெய்யா தெய்யா தெய் |
| 4 | தெய்யா தெய்யா தெய்யா தெய் |
| 5 | தெய்யா தெய்யா தெய் தெய் தாம் |
| 6 | தெய் தெய் தாம் தெய் தெய் தாம் |
| 7 | தெய் தெய் தத்தத் தெய் தெய் தாம் |
| 8 | தெய் தெய் தெய் தெய் தித்தித் தெய் |
| | . |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.1 :** 1ஆவது 2ஆவது தட்டடவுகளின் சொற்கட்டினையும் அதன் தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கொள்வோம்.

சொற்கட்டினைத் தாளத்திற்கு ஏற்ப மாணவரைப் பின்வருமாறு எழுதவழிப்படுத்தல். அங்கக் குறியீடுகள் போடப்படலாம். கார்வைக் குறியீடுகள் இடப்படாது எழுதுதல் வேண்டும்.

## 1ஆவது 2ஆவது தட்டடவுகள் (ஆதி தாளம்)

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்யா | தெய் | தெய்யா | தெய்/ | தெய்யா | தெய்/ | தெய்யா | தெய் // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்<br>தெய்ய<br>தெய் // |

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.2** : 3ஆவது தட்டடவின் சொற்கட்டினையும் அதன் தாள அங்கக் குறியீட்டினையும் அறிந்து கொள்வோம்.

## 3ஆவது தட்டடவு (ரூபக தாளம்)

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| **1ஆவது அட்சரம்** | **2ஆவது அட்சரம்** | **3ஆவது அட்சரம்** | **4ஆவது அட்சரம்** | **5ஆவது அட்சரம்** | **6ஆவது அட்சரம்** |
| தெய்யா | தெய்யா / | தெய் | தெய்யா | தெய்யா | தெய் // |
| தெய்யா<br>தெய்யா | தெய்<br>தெய்யா/ | தெய்யா<br>தெய் | தெய்யா<br>தெய்யா | தெய்<br>தெய்யா | தெய்யா<br>தெய் // |
| தெய்யா<br>தெய்யா<br>தெய்<br>தெய்யா | தெய்யா<br>தெய்<br>தெய்யா<br>தெய்யா/ | தெய்<br>தெய்யா<br>தெய்யா<br>தெய் | தெய்யா<br>தெய்யா<br>தெய்<br>தெய்யா | தெய்யா<br>தெய்<br>தெய்யா<br>தெய்யா | தெய்<br>தெய்யா<br>தெய்யா<br>தெய் // |

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் எண்ணக்கருக்களையும், அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3.3** : 4ஆவது, 5ஆவது, 6ஆவது, 7ஆவது, 8ஆவது தட்டடவுகளின் தாள அங்கக் குறியீட்டினை அறிந்து கொள்வோம்.

## 4ஆவது தட்டடவு (ஆதி தாளம்)

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்யா | தெய்யா | தெய்யா | தெய்/ | தெய்யா | தெய்யா/ | தெய்யா | தெய் // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய | தெய்ய<br>தெய் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் | தெய்ய<br>தெய்ய<br>தெய்ய<br>தெய் // |

# 5ஆவது தட்டடவு (ஆதி தாளம்)

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது<br>அட்சரம் | 2வது<br>அட்சரம் | 3வது<br>அட்சரம் | 4வது<br>அட்சரம் | 5வது<br>அட்சரம் | 6வது<br>அட்சரம் | 7வது<br>அட்சரம் | 8வது<br>அட்சரம் |
| **1ம்<br>காலம்** | | | | | | | |
| தெ ய்யா | தெய்யா | தெய்<br>தெய் | தாம்/ | தெய்யா | தெய்யா/ | தெய்<br>தெய் | தாம் // |
| **2ம்<br>காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம் | தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம்/ | தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம்/ | தெய்ய<br>தெய்ய | தெய் தெய்<br>தாம் // |
| **3ம்<br>காலம்** | | | | | | | |
| தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் / | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் | தெய்ய<br>தெய்ய<br>தெய்<br>தெய்தாம் // |

# 6ஆவது தட்டடவு (ஆதி தாளம்)

| 1$_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய் | தெய் | தாம் | / | தெய் | தெய் / | தாம் | // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய் தெய் | தாம் | தெய் தெய் | தாம் / | தெய் தெய் | தாம் / | தெய் தெய் | தாம் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய் தெய் தாம் | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் / | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் / | தெய் தெய்தாம் | தெய் தெய்தாம் // |

# 7ஆவது தட்டடவு (ஆதி தாளம்)

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது<br>அட்சரம் | 2வது<br>அட்சரம் | 3வது<br>அட்சரம் | 4வது<br>அட்சரம் | 5வது<br>அட்சரம் | 6வது<br>அட்சரம் | 7வது<br>அட்சரம் | 8வது<br>அட்சரம் |
| **1ம்<br>காலம்** | | | | | | | |
| தெய் | தெய் | தத் | தத் / | தெய் | தெய் / | தாம் | // |
| **2ம்<br>காலம்** | | | | | | | |
| தெய்<br>தெய் | தத்தத் | தெய்<br>தெய் | தாம் / | தெய்<br>தெய் | தத்தத் / | தெய்<br>தெய் | தாம் // |
| **3ம்<br>காலம்** | | | | | | | |
| தெய்<br>தெய்<br>தத்தத் | தெய்<br>தெய்தாம் | தெய்<br>தெய்<br>தத்தத் | தெய்<br>தெய்தாம் / | தெய்<br>தெய்<br>தத்தத் | தெய்<br>தெய்தாம் / | தெய்<br>தெய்<br>தத்தத் | தெய்<br>தெய்தாம் // |

## 8ஆவது தட்டடவு (ரூபக தாளம்)

| 0 | | $1_4$ | | | |
|---|---|---|---|---|---|
| 1ஆவது அட்சரம் | 2ஆவது அட்சரம் | 3ஆவது அட்சரம் | 4ஆவது அட்சரம் | 5ஆவது அட்சரம் | 6ஆவது அட்சரம் |
| தெய் | தெய் / | தெய் | தெய் | தித்தித் | தெய் // |
| தெய்தெய் | தெய்தெய்/ | தித்தித் தெய் | தெய்தெய் | தெய்தெய் | தித்தித் தெய் // |
| தெய்தெய் தெய்தெய் | தித்தித்தெய் தெய் தெய்/ | தெய்தெய் தித்தித்தெய் | தெய்தெய் தெய்தெய் | தித்தித்தெய் தெய்தெய் | தெய்தெய் தித்தித்தெய் // |

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.1** : நாட்டடவு பற்றி அறிந்து கொள்வோம்.

## நாட்டடவு

பரதநாட்டியத்தின் இரண்டாவது அப்பியாசமாகும். கால்களை நாட்டிச் செய்வதால் நாட்டவு என்ற பெயர் வந்தது. இது 8 வகைப்படும். இது ஆதிதாளத்தில் அமைந்துள்ளது. இதன் சொற்கட்டு தெய்யும் தத்த தெய்யும் தா. இவ் அடவிலேயே கைப் பிரயோகம் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

| அடவுகள் | பாவிக்கும் முத்திரைகள் |
|---|---|
| 1. } | |
| 2. } | |
| 3. } | திரிபதாகம் |
| 4. } | |
| 5. | கடகாமுகம், அலபத்மம், திரிபதாகம் |
| 6. | திரிபதாகம் |
| 7. | கடகாமுகம், அலபத்மம் |
| 8. | கடகாமுகம்,அலபத்மம்,சூசி,முஷ்டி, அவகித்தம்,பதாகம் |

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.2** : நாட்டடவிற்குரிய சொற்கட்டைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுவோம்.

## நாட்டடவு (ஆதி தாளம்)

| $1_4$ | | | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1வது அட்சரம் | 2வது அட்சரம் | 3வது அட்சரம் | 4வது அட்சரம் | 5வது அட்சரம் | 6வது அட்சரம் | 7வது அட்சரம் | 8வது அட்சரம் |
| **1ம் காலம்** | | | | | | | |
| தெய்யும் | தத்த | தெய்யும் | தாம் / | தெய்யும் | தத்த / | தெய்யும் | தாம் // |
| **2ம் காலம்** | | | | | | | |
| தெய்யும் தத்த | தெய்யும் தாம் | தெய்யும் தத்த | தெய்யும் தாம் / | தெய்யும் தத்த | தெய்யும் தாம் / | தெய்யும் தத்த | தெய்யும் தாம் // |
| **3ம் காலம்** | | | | | | | |
| தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் / | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம்/ | தெய்யும் தத்த தெய்யும் தாம் | தெய்யும் தத்த தெய்யும் தாம் // |

**தேர்ச்சி 4.0 :** நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.3 :** ‘‘நாட்டியக்கிரமம் பற்றி அறிந்து கொள்வோம்’’.

**நாட்டியக் கிரமம்**

யதோ ஹஸ்தஸ் ததோ திருஸ்டி /
யதோ திருஸ்டிஸ் ததோ மனஹ //
யதோ மனஸ் ததோ பாவ /
யதோ பாவஸ் ததோ ரஸஹ //

பொருள் - கைகள் எங்கு செல்கின்றனவோ அங்கு கண்கள் செல்ல வேண்டும் கண்கள் எங்கு செல்கின்றனவோ அங்கு மனம் செல்ல வேண்டும். மனம் எங்கு செல்கின்றதோ அங்கு பாவம் தோன்ற வேண்டும். பாவம் எங்கு செல்கின்றதோ அங்கு ரஸம் தோன்றும்.

ஆஸ்யே நாலமபயேத் கீதம்
ஹஸ்தே நார்த்தம் ப்ரதர்ஷயேத் /
சக்சுர்ப்யாம் தர்ஷயேத் பாவம்
பாதாப்யாம் தாளமாசரேத். //

பொருள் - பாட்டினை வாயினால் இசைக்க வேண்டும். கைகளினால் கருத்தை வெளிப்படுத்த வேண்டும். இரு கண்களாலும் பாவத்தைக் காட்ட வேண்டும். இரு கால்களாலும் தாளத்தைப் போட வேண்டும்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** : | நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார். |
| **தேர்ச்சிமட்டம்** | **5.1** : | நடனக்கலைக்குத் தொண்டாற்றியோர் பற்றி அறிந்து கூறுவார். |
| **செயற்பாடு** | **5.1.1** : | கோயில் நடனமாதர்கள் பற்றி அறிந்து கொள்வோம். |

## தேவரடியார்கள்

தேவரடியார் என்றால் தேவனுக்கு அதாவது - இறைவனுக்கு தெய்வத் தொண்டு செய்யும் பெண் எனப் பொருள்படும், தேவதாசி எனும் பதம் கோயில் திருப்பணிகளுக்காகத் தம்மை அர்ப்பணித்த பெண்களைக் குறிக்கும். தஞ்சைப் பெரிய கோயிலில் 407 தேவரடியார் கலைப்பணி புரிந்துள்ளனர். இவர்களுக்கு மன்னர்கள் மானியமும், பட்டங்களும் வழங்கியுள்ளனர்.

பல்லவர் காலத்து கோயில் முறையில் இத்தேவரடியாரை ஏழாகப் பகுத்துள்ளனர்.

* தத்தை
* விக்கிரீதை
* ப்ருஹித்ய
* பக்தை
* ஹரிதா
* அலங்காரை
* ருத்ரகணிகை

இந்த எழுவரில் அலங்காரையும், ருத்ரகணிகையும் கோயிலில் இசை, நடனம் போன்றவற்றைச் செய்வார்கள். ஏனையோர் பிற பணிகளான அலகிடல், மெழுகுதல், தீபம் ஏற்றல், பூ அலங்காரம் செய்தல் என்பவைகளைச் செய்தனர்.

இவர்கள் ரிஷபதளியார், தேவரடியார், தளிர்சேரிப் பெண்டுகள், கூத்திகள், கூத்தியர், ஆடற்கணிகையர், அரங்ககூத்தியர், அழகன்மார், பதியிலார், உருத்திரகணிகையர், மாணிக்கத்தார் எனப் பலவாறு அழைக்கப்பட்டனர்.

இந்தியாவிலே மாநிலத்திற்கு மாநிலம் தேவதாசிகளின் பெயர்கள் வேறுபட்டு நிலவியது.

* ஆந்திரப்பிரதேசம் - மாதங்கி, சானி, விலாஷினி
* கர்நாடகம் - சூலி, சானி, பாத்ரா
* மகராஷ்டிரா - பாஷவி
* உத்தரப் பிரதேசம் - பாலினி
* ஒரிஷா - மகரி

**தேர்ச்சி 5.0 :** நடனங்களின் கலாசார, பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.2.1 :** கிராமிய நடனங்களின் வகைகளை அறிந்து கூறுவோம்.

## கிராமிய நடனத்தின் வகைகள்

இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

- மகிழ்ச்சிக்காக ஆடப்படுபவை. கும்மி, கோலாட்டம், கரகம், காவடி.
- வேண்டுதலுக்காக ஆடப்படுபவை.
- தொழில் சார்ந்து ஆடப்பெறுபவை. அரிவுவெட்டு, மீனவ நடனம், தேயிலைக் கொழுந்து நடனம்.
- தொழில் சார் நடனங்கள் - அரிவிவெட்டு, மீனவ நடனம், தேயிலைக் கொழுந்து நடனம்.
- தொழிலைச் சித்திரித்து ஆடும் நடனம் தொழில் சார் நடனம் ஆகும்.
- மகிழ்ச்சிக்காக இடம்பெறும் நடனங்கள் - கும்மி, கோலாட்டம்.
- பொழுது போக்கிற்காக இடம்பெறும்.
- வேண்டுதலுக்குரிய நடனங்கள் - காவடி, கரகம்.
- நேர்த்திக்கடனுக்காக இடம்பெறும்.

**தேர்ச்சி 3.0 :** பரத நாட்டியத்திற்குரிய ஆரம்பப் பயிற்சிகளையும், அடவுகளையும், அங்க பேதங்களையும் நாட்டிய உருப்படிகளையும் அபிநயித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2**: அடிப்படை அடவுகள், கோலப் பயிற்சிகள் முத்திரைப் பிரயோகங்களை அபிநயித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2.1** : “இரட்டைக் கை முத்திரைகளை உச்சரிப்புப் பிழையின்றிக் கூறி அபிநயித்துக் காட்டுவோம்”.

## இரட்டைக்கை முத்திரை

இரு கைகளால் அபிநயிப்பது இரட்டைக்கை முத்திரை எனப்படும்.

01. அஞ்சலி - வணக்கம்
02. கபோதம் - புறா
03. கர்க்கடகம் - நண்டு
04. சுவஸ்திகம் - குறுக்கிட்டது
05. டோலம் - ஊஞ்சல்
06. புஷ்பபுடகம் - மலர்க்கூடை
07. உத்சங்கம் - அணைவு
08. சிவலிங்கம் - சிவலிங்கம்
09. கடகாவர்த்தனம் - அர்ச்சித்தல்
10. கர்த்தரீசுவஸ்திகம் - குறுக்குக் கத்தரிக்கோல்
11. சகடம் - வண்டி
12. சங்கு - சங்கு
13. சக்கரம் - சக்கராயுதம்
14. சம்புடம் - பெட்டி
15. பாசம் - கயிறு
16. கீலகம் - பிணைப்பு
17. மத்சயம் - மீன்
18. கூர்மம் - ஆமை
19. வராகம் - பன்றி
20. கருடன் - கருடப் பறவை
21. நாகபந்தம் - பாம்பின் கட்டு
22. கட்வா - கட்டில்
23. பேருண்டம் - பேருண்டப் பறவை
24. அவகித்தம் - பந்து விளையாடல்

## அபூர்வ முத்திரைகள்

1. பிரளம்பம் - வினாவுதல்
2. திரிலிங்கம் - ஊசி குத்துதல்
3. காங்கூலபேதம் முத்து

   (சிலிட்டகாங்கூலம்) -
4. குழிபதாகம் -
5. அர்த்தசூசி - பெரிய புழு
6. ஊர்ணநாபம் - சிலந்திப்பூச்சி
7. வியாக்கிரகம் - புலி
8. பல்லி ஹஸ்தம் -
9. பாண ஹஸ்தம் - கலப்பை

10 டமருகம் - உடுக்கு

11. கஜஹஸ்தம் - யானையின் தும்பிக்கை -

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பரத நாட்டியத்தின் அடவுகளுக்குரிய சொற்கட்டினையும், தாள அங்கக் குறியீட்டினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.2.3** : ''பரதம்'' என்ற பதத்தின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்வோம்.

## " பரதம் "

- பரதம், பாரத தேசத்தின் தென்னிந்திய சாஸ்திரிய நடனமாகும்.
- பரதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலும் இருந்து எடுக்கப்பட்ட ஐந்தாவது வேதம்.
- பரதம் எனும் பதம் பல நூற்றாண்டுகளாக வழங்கப்பட்டு வந்தாலும், ஈ.கிருஷ்ணய்யர், ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் ஆகியோரால் இப்பதத்திற்குப் புதிய பரிணாமம் கொடுத்து, பரத நாட்டியத்தை மேம்படுத்திப் பரவலாக்க வழிவகுத்தனர்.
- "பரத" எனும் பதம் நடிகன் என்பதைக் குறிக்கும்.
- பாவம், ராகம், தாளம் என்ற மூன்றையும் இலட்சணங்களாகக் கொண்டுள்ளது.
- பரதமுனிவரால் இலக்கணம் வகுக்கப்பட்டது.

**தேர்ச்சி 4.0** : நடனங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களையும், எண்ணக் கருக்களையும் விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பரத நாட்டியத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களையும், நாட்டடவிற்குரிய தாளத்தினையும் அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 4.3.4** : ''நாட்டிய இலட்சணம்'' பற்றிய விளக்கத்தை அறிந்து கொள்வோம்.

## நாட்டிய இலட்சணம்

நாட்டியத்தை அழகுபடுத்தும் அம்சங்களை நடனத்தின் இலட்ஷணங்கள் என்று கூறுகின்றோம்.

அவையாவன :-
1. பாவம்
2. இராகம்
3. தாளம்

**பாவம்:-**

மனதிலே தோன்றும் உணர்ச்சிகளை முகத்தின் மூலம் வெளிப்படுத்துதல் பாவம் எனப்படும்.

**இராகம்:-**

ஸ்வரக் கோர்வைகளால் அலங்கரிக்கப்பட்டு செவிக்கு இனிமையைத் தரக்கூடிய தொனி இராகமாகும்.

**தாளம்:-**

பாட்டின் காலப்பிரமாணத்தை அனுசரித்துக் கைகளினாலோ அன்றேல் கருவிகளினாலோ தட்டுதல் தாளம் எனப்படும்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை அறிந்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.2.2** : கும்மி, கோலாட்டம் ஆகிய கிராமிய நடனங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## கும்மி நடனம்

பெண்கள் வயது வேறுபாடின்றிக் கைகளைக் கொட்டி ஆடும் நடனம். இது கிராமிய நடனங்களில் மகிழ்ச்சிக்காக ஆடப்படும் நடனம் ஆகும். பாட்டிற்கு ஏற்ப கால்களில் அசைவுகளையும் அதற்கு ஏற்ப கையொலிகளையும் எழுப்பி ஆடுவர். தங்கள் கைகளைத் தட்டுவதோடு தோழிகளின் கைகளையும் தட்டுவர்.

கும்பி நடனம் சடங்குகளிலும் கோயில் விழாக்களிலும் ஊர்வலங்களிலும் பொது நிகழ்வுகளிலும் ஆடப்பட்டு வருகின்றது. அம்மன் விழாக்களில் கும்மி நடனத்துடன் பத்து நாட்களும் கொண்டாடுவர். இதற்கு ‘முளைப்பாரி’ என்று பெயர்.

இதில் கைத் தட்டு, விரல் தட்டு, அஞ்சலித் தட்டு எனப் பலவகையாக ஆடுவர். இதன் பாடல்கள் எளிமையான மொழி நடையிலும் இசையமைப்பிலும் அமைந்திருக்கும். இதற்கு ஆர்மோனியம், டோல்கி போன்ற வாத்தியங்களை இசைப்பர். இதற்கு முழுப்பாவாடை சட்டை, பாவாடைத் தாவணி, சேலை போன்ற உடைகள் அணியப்படும். பல்வேறு கோலங்களில் ஆடுவர்.

## கும்மிப் பாடல்

தான தன்னன்ன தன்னானே தன தான தன்னன்ன தன்னானே

கொத்து நிறைய முத்திருக்கு

கோயில் வயலும் வெளிச்சிருக்கு

சித்திரைக் கஞ்சிக்குப் படியளக்க

சிங்காரப் பெண்ணே கும்மியடி

பெத்துப் பெருகிடக் கும்மியடி – ஒரு

பொல்லாப்பு மில்லைக் கும்மியடி

குத்துப் படைக்கக் கும்மியடி

குங்குமப் பெண்ணே கும்மியடி.

## கோலாட்டம்

ஆண், பெண் ஆகிய இருபாலாராலும் சிறிய கோல்களைத் தட்டி ஒலியெழுப்பி ஆடும் நடனம் கோலாட்டம் எனப்படும். இது கிராமிய நடனங்களுள் மகிழ்ச்சிக்குரிய நடனங்களில் ஒன்றாகும்.

கோல்களைத் தாமே மோதிச் சத்த முண்டாக்கி ஆடுதல் சரவை எனவும், தமது கோல்களை மற்றவர் கோல்களுடன் மோதச் செய்து ஆடுதல் எதிர்ச்சரவை எனவும், பக்கவாட்டில் மோதுதல் பக்கச் சரவை எனவும், கைகளை உயர்த்தி மோதுதல் மேற் சரவை என்றும் கூறப்படுகிறது. இது விழாக்களின்போதும் மேடைநிகழ்வுகளின்போதும் ஊர்வலங்களின்போதும் ஆடப்படும். கோலாட்டங்களில் பின்னல் கோலாட்டம், வசந்தன் கோலாட்டம் என்பவற்றையும் குறிப்பிடலாம். பாடல்கள் எளிமையான மொழிநடையிலும் இசையமைப்பிலும் அமைக்கப்பட்டிருக்கும். ஆர்மோனியம், டோல்கி போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பல்வேறு கோலங்களில் ஆடுவர்.

**தேர்ச்சி 5.0** : நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4** : இலங்கையின் இந்துசமய விழாக்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.4.1** : பன்னிரு மாதங்களிலும் இடம்பெறும் இந்துசமய விழாக்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

## பன்னிரு மாதங்களுக்குரிய இந்துசமய விழாக்கள்

| | |
|---|---|
| தைமாதம் | :- தைப்பொங்கல், தைப்பூசம், புதுவருடப்பிறப்பு |
| மாசி மாதம் | :- சிவராத்திரி, மாசிமகம் |
| பங்குனி மாதம் | :- பங்குனி உத்தரம். |
| சித்திரை மாதம் | :- வருடப்பிறப்பு, சித்திரைப் பௌர்ணமி, |
| வைகாசி மாதம் | :- விசாகம். |
| ஆனி மாதம் | :- உத்தரம். |
| ஆடி மாதம் | :- ஆடி அமாவாசை, ஆடிப்பிறப்பு. |
| ஆவணி மாதம் | :- விநாயக சதுர்த்தி. |
| புரட்டாதி மாதம் | :- நவராத்திரி. |
| ஐப்பசி மாதம் | :- தீபாவளி, கந்தசஷ்டி. |
| கார்த்திகை மாதம் | :- திருக்கார்த்திகை. |
| மார்கழி மாதம் | :- திருவெம்பாவை, திருப்பாவை. |

**தேர்ச்சி 5.0 :** நடனங்களின் கலாசாரப் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை அறிந்து கூறுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.4 :** இலங்கையின் சமய விழாக்களின் பின்னணியை அறிந்து கூறுவார்.

**செயற்பாடு 5.4.2 :** சிங்கள மக்களின் பாரம்பரிய சமய விழாக்களில் ஒன்றான எசல பெரஹுராவின் அடிப்படை அம்சங்களை அறிந்து கொள்வோம்.

## எசல பெரஹுரா

- கண்டி தலதா மாளிகையில் நடைபெறும்.
- இப் பெரஹுரா 90 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.
- பெரும் எண்ணிக்கையாகப் புத்த குருமார்களும், மக்களும் கலந்துகொள்வார்கள்.
- அலங்கரிக்கப்பட்ட யானையில் புத்தரின் புனித பல்லை உள்ளடக்கிய பேழை ஊர்வலமாக வரும். ரன்சிவிஜே எனவும் மங்கள விஹுாஸ்தி எனவும் அழைக்கப்படும்.
- முதல் 5 இரவுகளும் குப்பல் பெரஹுரா நடைபெறும்.
- அடுத்த 5 இரவுகளும் ரங்கோலி பெரஹுரா நடைபெறும்.
- அடுத்த நாள் பகல் தவல் பெரஹுரா நடைபெறும்.
- பெரஹுரா ஊர்வலம் ஆடி அல்லது ஆவணி மாதத்தில் நிலவைப் பொறுத்து இரவில் இடம்பெறும். (நிகினி போயா)
- பெரஹுராவின் போது தீப்பந்தம் ஏற்றுபவரும் நெருப்பு சக்கரத்துடன் ஆடுபவரும் வெஸ் நடனம், பந்தேரு நடனம், உடக்கி நடனம், நையாண்டி நடனம், வண்ணங்கள், வடிகப்பட்டி நடனம், சொக்கரி, கோல நடனம், கோலாட்டம், கும்பி, செம்பு, பொய்க்கால் நடனம், சுளகு நடனம், உலக்கை நடனம் என்பன இடம்பெறும்.